பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 02 2025 **FRIDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நடப்பாண்டில் இறுதி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- பங்களாதேஷிலிருந்து இந்திய எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- நிலக்கரி விநியோகம் கடந்த இரண்டாண்டுகளில் இருமடங்காக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

- உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Angel Reyes Varela** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>

இந்தியாவுக்கும் - ஐரோப்பிய யூனியனுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நடப்பாண்டில் இறுதி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில், பிரதமர் திரு நரேந்திர மோடியை, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி **Ursula Vonder Layen,** - சந்தித்தபின் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தபோது இம்முடிவு அறிவிக்கப்பட்டது.

20 ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்புறவு இயற்கையானது மற்றும் உயிரோட்டம் மிக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

இருதரப்பு உறவுகள், நம்பிக்கை மற்றும் ஜனநாயக மாண்புகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், இதுவரை 20-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் மற்றும் ஆணையக்குழு இந்தியா வந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்த திரு நரேந்திர மோடி, வர்த்தகம், தொழில்நுட்பம்,

முதலீடு, வளர்ச்சி, பாதுகாப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல துறைகளிலும் ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து திட்டமிடப்பட உள்ளதாக கூறினார்.

செமி கண்டெக்டர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், ஆறு-ஜி தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதாக இந்த செய்தியாளர் சந்திப்பின்போது இருதலைவர்களும் தெரிவித்தனர்.

இந்தோ – பசிபிக் மண்டல நாடுகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஐரோப்பிய யூனியன் ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பதை வரவேற்பதாக கூறிய பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்த மண்டலத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைப்பாடு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

பங்களாதேஷிலிருந்து இந்திய எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக ரோஹிங்கியா அகதிகள் இந்தியாவுக்குள் வருவதால், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே ஊடுருவி உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களின் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில் புதிதாக பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, தில்லி உள்துறை அமைச்சர் திரு **Ashish Sood** மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றிய திரு அமித் ஷா, மத்தியிலும், தில்லியிலும் பிஜேபி ஆட்சிப்பொறுப்பில் இருப்பதால், பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

**<<<<<<>>>>>**

விரைவான வளர்ச்சி பெற்ற பொருளாதாரமாக இந்தியா தொடர்ந்து முன்னேறி வருகிறது.

நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ஐந்து புள்ளி ஆறு சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மூன்றாவது காலாண்டில் ஆறு புள்ளி இரண்டு சதவீதமாக உயர்ந்துள்ளது.

விவசாயத்திற்கு கிடைத்த கூடுதல் மழைப்பொழிவு, கிராமப்புற மக்களின் நுகர்வு அதிகரிப்பு, உள்ளிட்ட காரணங்களால் உள்நாட்டு உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது.

வளர்ச்சி மற்றும் மக்களின் மேம்பாட்டிற்காக அரசின் செலவினங்கள் அதிகரித்ததும் இதற்கு காரணம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

நிலக்கரி விநியோகம் கடந்த இரண்டாண்டுகளில் இருமடங்காக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, நிலக்கரி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த ஆண்டில் ரயில் மற்றும் கடல் மார்க்கமாக 54 மில்லியன் டன் நிலக்கரி எடுத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டில் இது, 28 மில்லியன் டன்னாக இருந்தது.

ரயில் மற்றும் கடல் மார்க்கமாக நிலக்கரி கொண்டு செல்லப்படுவதால், அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி குறித்த நேரத்தில் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் நடப்பாண்டிலும் எட்டு புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாகவே நீடிப்பதற்கு மத்திய அரசிடம் பரிந்துரை அளிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் மத்திய வாரியக்குழு இந்த பரிந்துரையை அளித்துள்ளதாகவும், நிதியமைச்சகத்தின் ஒப்புதலுக்கு பிறகு இதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் கூறினார்.

<<<<<<>>>>>

வேளாண் உற்பத்திக்குழுக்களை உருவாக்குவதற்கான இலக்கு முழுமையாக எட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கான இயக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் தொடங்கிவைத்ததாக வேளாண்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பத்தாயிரம் வேளாண் உற்பத்திக்குழுக்கள் நிறுவ வேண்டும் என்ற இலக்கோடு இந்த இயக்கம் தொடங்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பத்தாயிரமாவது குழு பீகாரில் இன்று தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் இலக்கு முழுமையாக எட்டப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கியுள்ள 57 தொழிலாளர்களில், 16 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படைகள் இந்தோ – திபெத்திய எல்லை காவல்படையினர் உள்ளிட்ட அமைப்பினரும், ராணுவத்தினரும் தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய விமானப்படையும் மீட்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், கடுமையான பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக மீட்புப்பணிகள் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, மாநில அரசு நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், மீட்புப்பணிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்துதரும் என்றும் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மீட்புப்படையினருக்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்துதரும் என்றும் உறுதியளித்துள்ளார்.

<<<<<<>>>>>

இந்த பனிச்சரிவு காரணமாக தகவல் தொடர்பு கட்டமைப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பனிச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு மருத்துவர்கள் அடங்கிய குழுவினரும் அனுப்பப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

கோவிட் பெருந்தொற்று காலத்தில் தில்லியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த ஆம் ஆத்மி அரசு, மருத்துவத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக பயன்படுத்தவில்லை என தலைமை கணக்காயரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் மீட்பு நடவடிக்கைகளை காலதாமதமாக செய்ததால், போதிய அளவு மருந்துகள் விநியோகிக்கப்படவில்லை என்றும் தில்லியில் உள்ள மருத்துவமனைகளில் போதிய மருத்துவப்பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்றும் தலைமை கணக்காயர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி சட்டப்பேரவையில் இன்று, இந்த அறிக்கையை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தாக்கல் செய்தார்.

2016-ஆம் ஆண்டு முதல், 2022-ஆம் ஆண்டு வரை **Rabies** மற்றும் **Haemophilia** போன்ற நோய்களுக்கான மருந்துகளும் போதிய அளவில் மருத்துவமனைகளில் இருப்பு வைக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், "உடல் பருமனை குறைப்பது" குறித்து வைஷ்ணவி சிவகுமாருடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Angel Reyes Varela** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-7, 6-2, 10-8 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **James Tracy - Hans Hach** இணையை வென்றது.

-----------------

இலங்கையில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Adita Rao** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-10, 12-21, 21-14 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Mansi Singh**-ஐ வென்றார்.

மற்றொரு ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Shreya Lele** 21-14, 21-17 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Ishika Jaiswal –**ஐ வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று **Pranay Katta-**வும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------

துபாய் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – ஆஸ்திரேலியாவின் **Alexei Popyrin** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>